★ செய்தியாளர் மாநாட்டில் வோல்டர் பெர்னாண்டோ

# ஆனையிறவு முகாமுக்கு அருகில் நின்று புலிகள் தாக்குதல் நடாத்துகின்றனர்

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

முரசொலி

முரசு 05 ஒலி 226 பிரசோற்பத்தி ஆனி 28 (12 - 07 - 1991) வெள்ளி

## மேஜர், 14 படையினர் இதுவரை பலியாம்

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து இருநூறு யார் தூரத்தில்நிலைகொண்டுவிடுதலைப்புலிகள் முகாம் மீது தாக்குதல் நடாத்துகின்றனர். இவ்வாறு பாது காப்பு இணையமைச்சின் செயலர் எயர் மார்ஷல் வோல்டர் பெர்னாண்டோ நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். அண்மைக் காலங்களில் வடபகுதியில் நடைபெற்ற மோதல்களில் ஆனையிறவில் தற்போது நடைபெறும் மோதல் பயங் கரமாக இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், படை யினருக்கு விமானப்படை மூலமே உதவி வழங்கப்படுவ தாகவும் விமானங்கள் மூலமாகவே ஆயுதம், உணவு முகாம் படையினருக்கு — 04 ஆம் பக்கம் பார்க்க

# ஆனையிறவு ராணுவ முகாம் புலிகளிடம் வீழும் நிலையில்

## உல்லாசப்பயணிகள் விடுதி முகாம் விடுதலைப்புலிகள் வசமானது

**ஆனையிறவு இராணுவ முகாம் மீதான இரு நாள் தாக்குதலின் பின்னர் முகாமின் பெரும் பகுதி விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்தது.**

தற்போது முகாமின் பிரதான பகுதியை நோக்கி விடுதலைப்புலிகள் கடும்ஷெல் தாக்குதலை மேற்கொண்ட வண்ணமுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு முகாமின்ஒரு பகுதியான உல்லாசப் பயணிகள் விடுதியைப் புலிகள் கைப்பற்றினர்.

விடுதி கைப்பற்றிய வேளை அங்கு இருந்த பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். காயமடைந்தவர்களை தூக்கிக் கொண்டு ஏனைய படையினர் பின்வாங்கிப் பிரதான முகாமினுள் நுழைந்தனர்

பிந்திய செய்திகளின் படி — 04 ஆம் பக்கம் பார்க்க

## முகாம் சுற்றாடலின் அரைப்பகுதி இரு நாள்களில் புலிகள் வசம்

சுமார் நாலரை மைல் சுற்றளவு கொண்ட ஆனையிறவு இராணுவ முகாமின் அரைப் பகுதி முதல் இரண்டு நாள்களிலேயே விடுதலைப்புலிகளிடம் வீழ்ந்தது.

பிரதான முகாமைச் சுற்றியிருந்த காவலரண்களில் இருந்த படையினர் தற்போது முகாமினுள் ஓடிச்சென்று விட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது.

பிரதான முகாமில் இருந்து படையினர் நிமிடத்துக்கு 20 ஷெல்கள் என ஏவிக்கொண்டிருப்பதாக நேற்று மாலையில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

படையினருக்கு உதவியாக ஐந்துக்கும் மேற்பட்ட குண்டு வீச்சு விமானங்களும், பயணி — 04 ஆம் பக்கம் பார்க்க

### கொழும்பில் இராணுவ அதிகாரி

## புலிகளின் தற்கொலைப்படை முகாமை இன்னும் தாக்கவில்லை

ஆனையிறவு இராணுவ முகாம் மீது இதுவரை விடுதலைப்புலிகள் தற்கொலைப் படைத்தாக்குதலை நடாத்தவில்லை என கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டதாக பி. பி. ஸி, தெரிவித்தது.

இப்படியான தாக்குதல் நடாத்தபபட்டால் அதை எவ்வாறு தடுப்பது என்று படையினர் அறிந்துள்ளதாகவும் அவ்வதிகாரி குறிப்பிட்டாராம்.

ஆனையிறவு இராணுவ முகாம் புலிகளிடம் வீழ்ந்துவிடாது என்றே நம்புகின்றோம் என அந்த இராணுவ அதிகாரி கொழும்பில் குறிப்பிட்டார் என பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது:

## பொம்மரைக்கண்டு கடலில் குதித்த இளைஞர் நீரில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம் வருவதற்காகச் சங்குப்பிட்டி இறங்கு துறையில் நின்ற பொதுமக்கள் பொம்மர் குண்டு வீச்சு விமானங்களின் வருகையைக் கண்டு செய்வதறியாது அதில் நின்ற பொதுமக்களில் 8 பேர் கடலில் குதித்தனர். இதில் கொக்குவிலைச் சேர்ந்த திரு. நடராஜா வதனராஜா (19) என்பவர் நீரில் மூழ்கி மரணமாகி சடலமாக மீட்கப்பட்டார்.

ஏனைய ஐவரும் தெய்வாதீனமாகக் கடலில் இருந்து மீட்கப்பட்டனர். மேலும் இருவரை இதுவரை காணவில்லையெனவும் இவர்கள் நீரில் மூழ்கி மரணமாகியிருக்கலாம் எனவும் தெரியவருகிறது.

இச்சம்பவம் நேற்றுப்பிற்பகல் 3 மணியளவில் எதிர் பாராத அளவில் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. ப-11

## குண்டுவீச்சு விமானங்கள் இரவிலும் தொடர் தாக்கு

ஆனையிறவு முகாமையும் அதை அண்டிய பகுதிகளிலும் தொடர்ந்து நேற்று இரவும் விமானத் தாக்குதல் நடைபெற்றது.

ஹெலியில் இருந்து பராலைட்டுகள்வீசப்பட்டன. இவ் வெளிச்சத்தின் உதவியில் மூன்று பொம்மர்கள், வை-12 ராட்சத விமானம் வை-8 விமானம் என்பன கடும் குண்டு வீச்சை நிகழ்த்தின.

பரந்தன், இயக்கச்சிப்பகுதி — 04 ஆம் பக்கம் பார்க்க

## விடுதலைப் புலிகளால் ஆயுதங்கள் மீட்பு

ஆனையிறவு முகாமின் உல்லாசப் பயணிகள் விடுதியை விடுதலைப் புலிகள் கைப்பற்றிய வேளை அதனுள் இருந்த பல ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன.

அங்கிருந்த இராணுவத்தினரின் சீருடைகளும்புலிகளால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## காயமடைந்த படையினரை ஹெலிமூலம் அகற்றமுடியாநிலை

ஆனையிறவு இராணுவ முகாமில் காயமடைந்த சிப்பாய்களை அகற்றமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக நேற்று பி. பி. ஸி குறிப்பிட்டது.

புலிகளின் ரொக்கட் தாக்குதல்கள் இராணுவ முகாமுக்கு மிக அண்மையில் வைத்து நடாத்தப்படுவதால் விமானப்படையினர் காயமடைந்தவர்களை அகற்றமுடியாத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## வீதியைத் தடைசெய்தல் தவிர்க்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம் கண்டிவீதி, ஆஸ்பத்திரிவீதி ஆகியவற்றை பொதுமக்கள் தடைசெய்யாமல் வாகனப் போக்குவரத்திற்கு வசதி செய்யுமுகமாக இவ் ஒத்துழைப்பினைத் தருமாறு விடுதலைப்புலிகள் வேண்டிக் கொள்கின்றனர்.

அதேசமயம் குறிக்கப்பட்ட பாதைகளில் அமர்த்தப்பட்டுள்ளதொண்டர்களுக்கும்ஒத்துழைப்புக் கொடுக்கும்படியும் கேட்டுள்ளனர்.

மாலை 6மணிக்குப் பின்னர் பொதுமக்கள் வீடுகளை —04 ஆம் பக்கம் பார்க்க

## ஆஸ்பத்திரி வாகனமும் ஓட இராணுவம் தடை

யாழ் போதனா வைத்திய சாலையில் கடமை புரியவரும் ஊழியர்களை ஏற்றி வரும் வாகனங்களை ஊரடங்குச் சட்ட நேரத்தில் வீதியில் செல்லக் கூடாதென்று கொழும்பு இராணுவக் கூட்டுத்தலைமையகம் நேற்று சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அறிவித்துள்ளது.

முன்னர் கூட்டுத்தலைமையகம் ஊழியர்களை அழைத்து வரும் வாகனங்களுக்கு ஊரடங்குச் சட்ட நேரத்திலும் அனுமதி வழங்கியிருந்தது.

—04 ஆம் பக்கம் பார்க்க

## குழந்தையைக் குலுக்கினால் குதூகலம் குறையும்

சிறுகுழந்தைகளை விளையாட்டிற்காக உயர எறிந்து எறிந்து பிடிப்பது அவர்களின் மூளையினைப் பாதிக்கும் என நரம்பியல் நிபுணர் ஒருவர் கூறினார்.

ஒரு குழந்தையை அளவுக்கு மீறிக் குலுக்குவது குழந்தையின் மென்மையான மண்டையோட்டுக்கும் வளர்ச்சியடையாத மூளைக்கும் பலவீனமான கழுத்துத் தசைகளுக்கும் ஆபத்தானவை என ரொபின் ஹம்பரீய்ஸ் என்னும் நரம்பு நிபுணர், மகாநாடு ஒன்றில் தெரிவித்தார்.

அமெரிக்கா, கனடா நாடுகளைச்சேர்ந்த நூற்றுக் கணக்கான டாக்டர்கள், தாதிகள் சமூக சேவையாளர்கள் இம் மகாநாட்டில் கலந்து கொண்டார்கள் (ப.10)

## டொனால்ட் போட்டி; முதல்சுற்றில் சிறப்பு வீரர்களாகத் தெரிவானோர்

டொனால்ட் கிரிக்கெட் போட்டித் தொடரின் முதல் சுற்றில் சிறந்த வீரர்களாகத் தெரிவானோர் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பரிஷ் எதிர் சென்றலைற்ஸ் (புலூஸ்) சிறந்த வீரர்:-எம். நித்தியேந்திரா. இவர் மானிப்பாய் பரிஷ் அணியைச் சேர்ந்தவர். எடுத்த ஓட்டங்கள்—ஆட்டமிழக்காது 55. எடுத்த விக்கட்டுக்கள்-3.

சென்றலைஸ் (சொக்ஸ்) எதிர் கிறீன் அன்ட் கோல்ட். சிறந்த வீரர்:—சீ. என். மதிவதனன். இவர் சென்றலைற்ஸ் (சொக்ஸ்) அணியைச் சேர்ந்தவர் எடுத்த ஓட்டங்கள்-43.

ஜொனியன்ஸ் எதிர் நொதேண் சிறந்த வீரர்—ரீ. சதீசன். இவர் மிகத்திறமையாக விளையாடி 113 ஓட்டங்களைப் பெற்றார்.

பருத்தித்துறை கிரிக்கெட் அணி எதிர் ஷப்றா. சிறந்த வீரர்—கே மணிவண்ணன் இவர் 52 ஓட்டங்களைப் பெற்றார். 3 விக்கட்டுக்களையும் கைப்பற்றினார்.

கொக்குவில் சீ. சீ. சீ. அணி எதிர் ஸ்ரான்லி. சிறந்த வீரர்—கே. கண்ணன்—கொக்குவில்சீ.சீ.சீ. அணியைச் சேர்ந்தவர் 6 ஓட்டங்களைக் கொடுத்து 5விக்கட்டுக்களைக் கைப்பற்றினார்.

★'இன்டர்கோ பிரஸ்' கருத்து

## 'சார்க்'கின் கொழும்பு மகாநாடு எதனையும்சாதிக்கப்போவதில்லை!

'சார்க்' அதன் உறுப்பு நாடுகளையே பிணைத்து வைக்க முடியாதிருக்கும் ஒரு அமைப்பென 'இன்டர் கோ பிரஸ்' தெரிவித்துள்ளது.

இந்தியா. பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, நேபாளம், பூட்டான், மாலைதீவு ஆகிய இந்நாடுகளின் தலைவர்கள் வறுமை ஒழிப்புக்கான சிறந்த வழி பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பே எனத் தெரிவித்த போதிலும் அந்த பிராந்திய ஒத்துழைப்பினால் அடையக்கூடிய நன்மைகளைப் பாரம்பரிய மத இன போட்டாபோட்டிகள் முந்திக் கொண்டு நிற்பதால் அது இன்னமும் ஒரு நெடுந்தூரக் கனவாகவே தோன்றுகிறது எனவும் 'இன்டர் கோ பிரஸ்' தெரிவித்துள்ளது.

குறிப்பிட்டுக் கூறக் கூடிய ஐந்து வருட சார்க் அமைப்பு நவம்பரில் கொழும்பில் நடைபெறவுள்ள ஒன்றுகூடலின் மூலமும் பெரிதாக எதனையும் சாதிக்கப் போவதில்லை என 'இன்டர் கோ பிரஸ்' மேலும் தெரிவித்துள்ளது.

## இந்தியப் புலனாய்வுக் குழுவுக்கு அநாமதேயக் கடிதங்கள்

சென்னையில் உள்ள விசேட புலனாய்வுக் குழுவுக்குச் சில அநாமதேயக் கடிதங்கள் வந்துள்ளதாகச் சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ராஜீவ்காந்தி படுகொலையுடன் தொடர்பான கொலையாளிகளை நீங்கள் கண்டு கண்டுபிடிக்க நாம் கடவுளை வேண்டுகிறோம் என அக் கடிதமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

இதேபோலத் தகவல் தருபவர்கள் தொலைபேசி மூலமாகவும், நேரடியாகவும் நம்முடன் தொடர்பு கொண்டுள்ள போதிலும் அவற்றில் பலனில்லை எனவும் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (83)

## பதிவுசெய்தவர்களின் வீடுகள் போலிசாரினால் சோதனையிடப்படும்

கொழும்பில் தற்காலிகமாகத் தங்கியிருப்போர் தம்மை 14 நாட்களுக்குள் பதிவு செய்த பின்னர் அவர்கள் இருக்கும் இடங்கள், வீடுகள், விடுதிகள் சோதனை செய்யப்படுமெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சோதனை செய்யப்படும்போது பதிவு செய்யாதவர்கள் எவராவது இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

பதிவு செய்வதற்குரிய திகதி மேலும் நீடிக்கப்படமாட்டாதெனவும் பொலிஸ் வட்டாரம் தெரிவித்துள்ளது. (38)

## முதலீடு செய்ய வருபவருக்கு விமான நிலையத்தில் விஸா

வர்த்தக நோக்கமாகவோ இன்றி இலங்கையில் முதலீடு செய்வதற்காகவோ இலங்கை வரும் பிற நாட்டவர்க்கு 10 நாள் 'விஸா' விமான நிலையத்தில் வைத்து வழங்கப்படும் எனக்கொழும்பு பாரிய பொருளாதார ஆணைக் குழு அறிவித்துள்ளது.

இந்த 10 நாள் விஸாவும் குடிவரவுத் திணைக்களத்தால் கொழும்பு பாரியபொருளாதாரக் குழுவினது சிபார்சின் பேரில் நீடிக்கப்படும்.

## மட்டு. பல்கலைக்கழகத்தில் 15 ஆம் திகதி முதல் விரிவுரை

மட்டு. பல்கலைக்கழகம் புதியகல்வி ஆண்டு விரிவுரைகளுக்காக இம்மாதம் 15 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானபீட விரிவுரைகள் ஆங்கில மொழிமூலமும், வர்த்தக, கலைப்பீடத்திற்கான விரிவுரைகள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலமும் இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டது.


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### கேள்விப் பத்திர அறிவித்தல்

மூன்று புசல் நெல் கொள்ளக்கூடிய 1250 வெற்றுச் சாக்குகளை வழங்குதல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு 1250 வெற்றுச் சாக்குகளை உடனடியாக வழங்குவதற்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகள் பின்வரும் விவரங்களைக் கொண்டதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெயருக்கு எழுதப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணமாக ரூபா 150/-காசுக்கட்டளை/தபாற் கட்டளையுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கட்டணம் இன்றி அனுப்பப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

பெயர்:
முகவரி:
வெற்றுச் சாக்கின் கொள்ளவு:
ஒன்றுக்கான விலை;
வழங்கக் கூடியதொகை:

கேள்விகளுக்குவிண்ணப்பிப்போர் கேள்விப்பத்திர தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "வெற்றுச்சாக்குகள் வழங்கலுக்கான கேள்விகள்" எனக் குறிப்பிட்டு பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு23.7 91 காலை 10.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கும் படியாக அனுப்பி வைக்கப் படல் வேண்டும். கேள்விகள் 23. 07. 91 முற்பகல் 10. 30 மணிக்குத் திறக்கப்படும்.

— பதிவாளர்

07055


## அன்னை பூபதி நினைவுப் போட்டி பரிசு பெறும் மாணவர் விவரம்

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் வட தமிழீழத்தில் 12-04-91 அன்று நடாத்திய அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுப் போட்டியில் மாவட்ட ரீதியாகவும், கொத்தணி ரீதியாகவும் மேற்பிரிவிலும், கீழ்ப்பிரிவிலும் அதிக புள்ளிகள் பெற்ற பரிசுக்குரிய மாணவர்களின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டரீதியாக வந்த முடிவுகள் வருமாறு—

மன்னார் மாவட்டம்

மாவட்ட ரீதியாகப் பரிசு பெறுபவர்கள்— மேற்பிரிவு பூநகரி கொத்தணி க.சிவகுமார்பூநகரி மகாவித்தியாலயம், கீழ்ப்பிரிவு - விடத்தல்த்தீவு கொத்தணி சி நொறின் விடத்தல் தீவு றோ. க. த.க. பாடசாலை.

கொத்தணி ரீதியாகப்பரிசு பெறுபவர்கள்— மேற்பிரிவு- விடத்தல்தீவு க. செல்வரூபன் இலுப்பைக்கடவை அ. க த. பாடசாலை, முழங்காவில் பொ சிவானந்தி முழங்காவில் மகா வித்தியாலயம், பூநகரி க.சிவகுமார் பூநகரி மகா வித்தியாலயம், பண்டிவிரிச்சான் மிக்ஷன் தாசன் மடு அகதிமுகாம் பாடசாலை.

கீழ்ப்பிரிவு- விடத்தல்தீவு கி நொறின் விடத்தல்தீவு றோ. க த க. பாடசாலை, முழங்காவில் அ. சிறிதானி கிளி/கரியாலை நாகபடுவான் இல.11 அ த.க.பாடசாலை, பூநகரி டெனி சுதாகர் பூநகரி மகா வித்தியாலயம், பண்டிவிரிச்சான் செ. மேரிய சோதா மடு அகதிமுகாம் பாடசாலை.

வவுனியா மாவட்டம்

மாவட்ட ரீதியாகப் பரிசு பெறுபவர்கள்- மேற்பிரிவு- பொ. ஞானப்பிரகாசம் ஞானசீலன் கனகராயன் குளம் மகா வித்தியாலயம், கீழ்ப்பிரிவு- தனபாலசிங்கம் தருசினி கனகராயன்குளம் மகா வித்தியாலயம்.

கொத்தணி ரீதியாகப் பரிசு பெறுபவர்கள்— மேற்பிரிவு- கனகராயன்குளம் பொ. ஞானப்பிரகாசம் ஞானசீலன் கனகராயன்குளம் மகாவித்தியாலயம், கீழ்ப்பிரிவு கனகராயன்குளம் தனபாலசிங்கம் மருசினி கனகராயன்குளம் தகா வித்தியாலயம்.

மணலாறு மாவட்டம்

மாவட்ட ரீதியாகப் பரிசு பெறுபவர்கள்— மேற்பிரிவு- லி.வசந்தி அளம்பில் க.உ. வித்தியாசாலை, கீழ்ப்பிரிவு- இ.புனிதவதி குமுளமுனை மகா வித்தியாலயம்.

கொத்தணி ரீதியாகப் பரிசு பெறுபவர்கள்— மேற்பிரிவு- குமுளமுனை த. கனகசபேசன் குமுளமுனை மகாவித்தியாலயம், செம்மலை வே. வசந்தகுமாரி செம்மலை மகா வித்தியாலயம், அளம்பில் லி.வசந்தி அளம்பில் க உ. வித்தியாலயம்.

கீழ்ப்பிரிவு- குமுளமுனை இ புனிதவதி குமுளமுனை மகா வித்தியாலயம், செம்மலை அ ஜெனார்த்தனன் செம்மலை மகா வித்தியாலயம், அளம்பில் அ. சுஜித்தா அளம்பில் க.உ. வித்தியாலயம்.

(தொடரும்)

## வன்னிச் செய்திகள்

### வவுனியாவும் ஊரடங்கில்

வவுனியாவிலும் நேற்று முன்தினம் மாலை ஆறு மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. தற்போது மன்னார் தவிர்ந்த வடக்கின் ஏனைய பகுதிகளில் ஊரடங்கு அமுலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஷெல்வீச்சினால் மேலும் சேதம்

முல்லைத்தீவில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்தவர்களது நகரப் பகுதி வீடுகள்பல இராணுவத்தினரின் பலத்த குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்களினால் மேலும் மேலும் சேதமடைந்து வருகின்றன. (38)

### மர வேலைப் பாடசாலை

வவுனியாவில் உள்ள மர வேலைப் பாடசாலை கடந்த ஒரு வருடமாக மூடப்பட்டுள்ளது. இதனை மீண்டும் ஆரம்பிக்கப் போவதாகச் சம்பந்தப்பட்டவர்கள் கூறிவந்தும் இன்னமும் மூடியபடியே காணப்படுகிறது. (48)

### ஐவர் படுகாயம்

புதுமுறிப்புக் குளத்திற்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

திருமண வைபவம் ஒன்றிற்கு ஸ்கந்தபுரத்தில் இருந்து வந்து கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### ஆரம்பம்

மன்னார் மாவட்டத்தில் ஹற்றன் தேசிய வங்கி தனது சேவையில் சிறுவர்களுக்குரிய சேமிப்புக் கணக்கினையும் சிறு சேமிப்பாளர்களுக்குரிய சேமிப்புக் கூப்பன் கணக்கினையும் ஆரம்பித்துள்ளது. (17)

### அட்டகாசம்

முல்லைத்திவு மாவட்டத்தில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது. யானைக் கூட்டங்கள் அங்குள்ள குடிசைகளைச் சேதப்படுத்தியும், பயன் தரும் மரங்களை நாசப்படுத்தியும் வருகின்றன.

இரவு நேரங்களில் கூட்டமாக வெளியேறும் யானைகள் நெல் வயல்களை அழித்தும் வருகின்றன. வீடுகளுக்குள்பிரவேசிக்கும் யானைகள் அங்குள்ள தானிய வகைகளை ஏப்பமிட்டுச் செல்கின்றன.

## வானொலி எழுத்துப்பட்டறை; பல அறிஞர்கள் கலந்துகொள்வர்

கத்தோலிக்க சமூகத் தொடர்பு சாதன ஆணைக் குழு ஏற்பாடு செய்துள்ள வானொலி நாடக எழுத்துப் பட்டறை 13ஆம் 14ஆம் திகதிகளில் யாழ் நகரில் நடைபெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்ச்சியில் அருட்திரு மைக்கல் யோசப் அடிகளார், யாழ். பல்கலைக் கழகம் என். சண்முகலிங்கன், கலாநிதி. நீ. மரிய சேவியர், திருமதி கோகிலா மகேந்திரன், அராலியூர் சுந்தரம் பிள்ளை, நா. சுந்தரலிங்கம், எஸ். சுமலராஜ், பேராசிரியர், கா. சிவத்தம்பி ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவர்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் பி. ஆனந்தராஜா, கலாநிதி சி. மௌனகுரு, குழந்தை ம. சண்முகலிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

## மருத்துவ மாதர் பரீட்சை

அரசாங்க ஆஸ்பத்திரி மருத்துவ மாதர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம் மாதம் 19 ஆகும். (ப- 11)

## செப்டம்பர் 30முதல் ஒக். 6வரை ஆசிரியர் தினக் கொண்டாட்ட

சர்வதேச ஆசிரியர் தினம் இவ்வருடம் ஒக்டோபர் 6ஆம் திகதி கொண்டாடப்பட உள்ளது.

இக்கொண்டாட்டங்கள் செப்டம்பர் 30 ஆம் திகதியில் இருந்து ஒக்டோபர் 6 ஆம் திகதிவரை உள்ள வாரத்துக்குள் நடைபெற உள்ளன.

பாடசாலை, கோட்டக் கல்வி, மாவட்டம், தேசிய மட்டம் ஆகிய மட்டங்களில் இது நடைபெற உள்ளது

ஆசிரியர்களது மகத்தான பணியைக் கௌரவிப்பது குறிப்பிடக்கூடிய சேவை ஆற்றிய ஆசிரியர்களைக் கௌரவித்தல், சேவையில் இருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர்களைக் கௌரவிப்பது, பெற்றோர், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் மூலமாக ஆசிரியர்கள் பாராட்டப்படுதல் என்பவைகளே இக்கொண்டாட்டத்தின் நோக்கங்களாகும். (78)

## மீன்பிடிக் கூட்டுத்தாபனக்கப்பலில் சிங்கப்பூரிலிருந்து கள்ளக்கடத்தல்

மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் சில அதிகாரிகள் கள்ளக் கடத்தலில் ஈடுபட்டு வந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டுத்தாபனத்தின் சில அதிகாரிகள் தமது உத்தியோகபூர்வ அதிகாரத்தைப் பயன்படுத்தி கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 'நிகம்பு ஓஷன்' என்ற கப்பலில் சிங்கப்பூரில் இருந்து கள்ளக்கடத்தலில் ஈடுபட்டமையும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இது குறித்து உயர்மட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அறியப்படுகின்றது. (33)

## 'செவன'சுரண்டல் ரிக்கற்றையும் தடைசெய்யக் கோரிக்கை

ஜக்பொட் சூதாட்ட இயந்திரங்களைப் பறிமுதல் செய்தது போல் 'செவன' சுரண்டல் சுவீப் ரிக்கற்றுகளையும் அரசு தடைசெய்ய வேண்டுமென அத்தாவுட செனிவிரத்ன எம்.பி. பாராளுமன்றத்தில் கேட்டுள்ளார்.

இந்த சுரண்டும் 'செவன' ரிக்கற்றுக்களும் சூதாட்டத்தை ஒத்தவையே. தோற்றவர்களை மீண்டும் மீண்டும் விளையாடத் தூண்டும் இது போன்ற ரிக்கற்விற்பனையையும் அரசு தடுக்க வேண்டுமென அவர் அங்கு குறிப்பிட்டார்.

## மடு அகதி முகாமை மூன்று பிரிவுகளாகப் பிரிக்க முயற்சி

மடு அகதி முகாம் மூன்றாகப் பிரிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்முகாம் மடு, ஆட்காட்டி வெளி, நானாட்டான் ஆகிய பகுதிகளில் இந்தப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன.

வரட்சிகாரணமாக குடிநீர் பெறுவதில் உள்ள சிரமத்தினாலேயே இந்த நடவடிக்கை யெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (74)

## தமிழ்மொழி ஆலோசகர்களுக்கு கொழும்பில் சேவைப்பயிற்சி

ஆண்டு 6 தொடக்கம் 8ஆம் வரையுள்ள வகுப்புக்களுக்கான தமிழ் மொழிப் பாட ஆசிரிய ஆலோசகர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி நெறி மகரகம தேசியக் கல்வி நிறுவனத் தமிழ்ப் பிரிவால் இம் மாதம் 26ஆம், 27ஆம், 28ஆம் திகதிகளில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

தமிழ் மொழித்துறைப் பணிப்பாளர் கு. சோமசுந்தரம் இதனை அறிவித்துள்ளார். (78)

## பொற்றாசியஉரத்திற்குப் பதிலாக வைக்கோல் நல்ல பயன் தரும்

வைக்கோலை உரமாகப் பாவிப்பதன் மூலம் பயிர்களுக்குத் தேவையான பெற்றாசிய உரத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவிவசாயத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவ்வித மேலதிகச் செலவுமின்றி வைக்கோலை உரமாகப்பயன்படுத்த முடியும்.

தெங்கு, இறப்பர், தேயிலைச்செய்கைக்கு இந்த வைக்கோல் உரம் சிறந்தது.

சாணத்தைவைக்கோலுடன் கலந்து பயன்படுத்தும் முறை கூடிய பலனைத்தரும் எனவும் விவசாயத்திணைக்களம் தெரிவிதுள்ளது.

## 54 வயதடைந்த ஆசிரியர் சுய விவரம் சேகரிப்பு

ஐம்பத்திநான்கு வயது பூர்த்தியடைந்த ஆசிரியர்களின் சுயவிவரக் கோவைகளைத் தாபனக்கிளைக்குப் பொறுப்பான ஊழியர் உடனடியாகப் பூர்த்தி செய்துஅது பற்றிய பட்டியல் ஒன்றைத் தாயாரித்து வைக்க வேண்டுமென வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயளாளர் பணித்துள்ளார்.

இதுபற்றிய விவரங்களை ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்கு முன் பாகத் தமக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கோரியுள்ளார். 78

## உ. அ. அதிபர் அலுவலகங்கள் மினிக்கச்சேரிகளாகச்செயற்படும்

சகல உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களும் இனி மினிக்கச்சேரிகளாகச் செயற்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

நிருவாக பரவலாக்கல் திட்டத்திற்கமையவே இப் புதிய மினிக்கச்சேரிகள் செயற்படவுள்ளன.

இதற்கேதுவாக ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் மேலதிகமாக மேலதிக அரச அதிபர் ஒருவரும் நியமிக்கப்படவுள்ளனர்.

இவருக்கு முழு அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளதால் மக்கள் கச்சேரிக்கு செல்ல வேண்டிய வேலை வெகுவாகக் குறையும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வலிவடக்குப் பகுதியில் வானம் பார்த்த வீடுகள்

வலி வடக்கில் உள்ள பல வீடுகள் 'வானம் பார்த்த வீடு'களாக காட்சியளிப்பதாக தெரியவந்துள்ளது.

அப்பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அங்குள்ள 'அஸ்பெஸ்டஸ்' கூரைத் தகடு போட்ட வீடுகளில் இருந்து அவற்றைக் கழற்றி எடுத்துத்தங்களுக்கு வேண்டிய முகாம்களை அமைக்கப் பயன்படுத்தியதாலேயே 'அஸ்பெஸ்டஸ் சீற்' வீடுகள் அவ்வாறு காட்சியளிப்பதாக அங்கிருந்து வந்த பொதுமக்கள் தெரிவித்தார்கள். ப-10)

## கிழக்கிற்குப் புதிய பஸ்களை அனுப்ப கொழும்பில் அனுமதி மறுப்பு

மட்டக்களப்புக்குப் புதிய பஸ்களை அனுப்பி வைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்குக் கொழும்பு தலைமை அலுவலகம் மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு நிலைமை காரணமாக அவற்றை அனுப்ப முடியாதிருப்பதாகக் கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளதாம்.

இதேவேளை மட்டக்களப்புப் பகுதியில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதாகவும் இதனால் நீர்விநியோகத்தைச் சீராக மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (38)

## சர்வதேச கிரிக்கெட் அமைப்பில் மீண்டும் தென்னாபிரிக்கா

நிறவெறி நடவடிக்கைகளுக்காக சர்வதேச கிரிக்கட் மகாநாட்டு அமைப்பிலிருந்து நீக்கி வைக்கப்பட்ட தென்னாபிரிக்கா மீண்டும் அவ்வமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

லண்டனில் நேற்று முன்தினம் நடந்த மேற்படி மகாநாட்டு அமைப்புக்கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது

தென்னாபிரிக்காவை மீண்டும் அங்கத்தவ நாடாகச் சேர்ப்பதற்கு ஆதரவாக இலங்கைஅங்கு வாக்களித்தது.

இதன் மூலம் சர்வதேச டெஸ்ட் ஆட்டங்களில் இனி தென்னாபிரிக்காவும் கலந்து கொள்ளும். தென்னாபிரிக்காவுடன் சிநேகபூர்வ போட்டிகளில் கலந்து கொண்டமைக்காக இலங்கை உட்பட பல நாடுகளின்முன்னணிக்கிரிக்கட் வீரர்கள் முன்னர் அந்தந்த நாடுகளினால் தண்டிக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (16)

## அடிக்கடி இடமாற்றப்படும் பிள்ளையார் விக்கிரகம்

வறுத்தலைவிளான்பிள்ளையார் கோயில் மூலவிக்கிரகம் இராணுவத்தினரால் மூலஸ்தானத்திலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டு கோயில் சுற்றாடலில் உள்ள மரங்களுக்குக் கீழ் வைக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து மீட்கப்பட்டு வெளியே வந்த பொது மக்கள் தெரிவித்தனர்.

இந்தப்பிள்ளையார் விக்கிரகம் அடிக்கடி இடம் மாற்றப்பட்டுவெவ்வேறுமரங்களுக்குக் கிழே வைக்கப்படுவதாகவும். சில சிப்பாய்கள் 'கணதெய்யோவும் இப்போது அகதியாகி விட்டார்' எனக் கூறி அவமதிப்புச் செய்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர். ப -10

## துருக்கியில் இறக்கிவிடப்பட்டோரில் 8பேர் இந்தியர்; 31பேர் இலங்கையர்

கிரேக்க கரையெனக் கூறப்பட்டு துருக்கிக் கரையில் சில தினங்களுக்கு முன் இறக்கப்பட்ட 46 பேரில் 8 பேர் இந்தியர்களெனவும், 7 பேர் பங்களாதேசத்தவர்களெனவும் தெரியவந்துள்ளது. இவர்களில் 31 பேர் இலங்கைத் தமிழர்களாவர்.

கிரேக்கக் கரையில் இறக்கிவிடுவதாகக் கூறி இந்திய சரக்குக் கப்பல் ஒன்றின் கப்டன் இவர்களிடம் குறிப்பிட்ட தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்டதாகவும் பின்னர் 26 நாள் பயணத்தின் பின்னர் இவர்களை துருக்கிக் கரையில் இறக்கி விட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சைக்கிள்கள் மீட்பு

கடந்த புதன்கிழமை மாலை கௌதாரி முனையில் ஏற்பட்ட படகு விபத்தில் கொல்லப்பட்ட இருவரினதும் சைக்கிள்கள் மீட்கப்பட்டு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## இவ்வாரம் இரு வயலினிசை

யாழ் பல்கலைக் கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் வெள்ளி கலை நிகழ்ச்சித் தொடரில் இன்று12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4. 15 மணிக்கு 'இரு வயலினிசை' இடம்பெறும்

இசைக் கலை மணி செல்வி பா. கண்ணாம்பாள், யாழ் பல்கலைக்கழக பொருளியற் சிறப்புக் கலை மாணவி செல்வி பா. நாகவல்லி ஆகியோரின் வயலின் கச்சேரியும், இராமநாதன் நுண்கலைக் கழக மாணவன் எஸ். பாலச்சந்திர சர்மாவின் மிருதங்கமும் அங்கு இடம்பெறும்.

## மக்களிடமிருந்து ஜே. வி. பி யால் 8லட்சம் அ. அட்டைகள் அபகரிப்பு!

தென்பகுதியில் ஜே. வி. பி. இயக்கத்தினரால் பொதுமக்களிடமிருந்து எட்டுலட்சம் தேசிய. ஆளடையாள அட்டைகள் அபகரிக்கப்பட்டுள்ளதாகத் தற்பொழுது கணக்கிடப்பட்டுள்ளது.

1988, 89ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த ஆளடையாள அட்டைகள் அபகரிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

இதனால் தேசிய ஆளடையாள அட்டைக்குப் புதிதாக விண்ணப்பிப்போரின் தொகை தற்போது நாளொன்றுக்கு 2[illegible] ஆயிரமாக அதிகரித்துள்ளது.

## நூல் வெளியீட்டு விழா

'50நாடுகளை அறியுங்கள்' என்னும்நூல்வெளியீட்டுவிழா எதிர் வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மயிலணி சைவ மகாவித்தியாலய அதிபர் சு. துரைசிங்கம் எழுதிய இந்நூல் வெளியீட்டு விழாவில் யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம், யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராசா உட்படப் பலர் கலந்துகொண்டு உரையாற்றுவர்.

## மிழகத்தில் உள்ள இலங்கையர்

# வீடுகளை விட்டு வெளியேற இந்தியர்கள் நிர்ப்பந்தம்

தமிழகத்தில் வீடுகளில் தங்கியுள்ள இலங்கையர் களை பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாகவும் வீடுகள் தருவி ஆராயப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே இலங்கையருக்கு வீடு வழங்க இந்திய மக்கள் மறுத்து வருகின்றனர். ஏற்கனவே வாடகைக்கு அமர்த்தப்பட்ட இலங்கையரையும் வீட்டை விட்டு வெளியேறுமாறு இந்தியர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

## ஊரடங்குச்சட்டத்தால்

# கப்பலிலிருந்துபொருள்களை இறக்கும் வேலை பாதிப்பு

பருத்தித்துறை இறங்குதுறைக்கு உணவுப் பொருள்களை எடுத்து வந்த இரு கப்பல்கள் ஊரடங்குச் சட்டம் காரணமாக காங்கேசன்துறைக்குக்கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

முன்னர் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்படும் போது விசேட அனுமதி துறைமுகப் பகுதிக்கு மட்டும் வழங்கப்பட்டு உணவுப் பொருள்கள் பறிக்கப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தற்போது பொருள்கள் இறக்கப்படாது காங்கேசன் துறைக்குக் கப்பல் கொண்டு செல்லப்பட்டதால் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான உலர் உணவுப் பொருள்கள் விநியோகம் மேலும் பாதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 38

# மனித உரிமைக்குற்றச்சாட்டு ஸ்ரீலங்கா அரசு மறுப்பு!

இலங்கையின் வடக்குக்கிழக்குப் பகுதியில் பல பொது மக்கள் படையினரால் கொல்லப்படுவதாகவும், பலர் காணாமல் போனதாகவும் சர்வதேச மனித உரிமைகள் சங்கம் விடுத்த அறிக்கையை அரசு மறுத்துள்ளது

மனித உரிமைகள் சங்கத்தின் இவ்வறிக்கை மிகைப்படுத்தப்பட்ட ஒன்று எனவும் இப்படியான சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை எனவும் அரசு குறிப்பிட்டுள்ளது.

# பொலிஸ்நிலையம் முன்பாக லொறி நிறுத்தத் தடை

வடபகுதிக்கு பொருள்களை ஏற்றிவரும் தனியார் லொறி வாகனங்கள் அனுராதபுரத்தில்உள்ள இராணுவ முகாமில் அனுமதிபெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதால் லொறி உரிமையாளர்கள் மேலும் கஷ்டமடைகின்றனர்.

பொருள்களை ஏற்றிக்கொண்டு லொறிகள் அனுராதபுரத்தில் அனுமதி பெறுவதற்குத்தவம்கிடக்கின்றன.

அனுமதிபெறத்தாமதம் ஏற்படுவதால் பொருள்களையும் லொறியையும் பாதுகாப்பாக நிறுத்துவதற்கு இடமின்றி அவதிப்படுகின்றனர்.

பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகலொறிகளை நிறுத்த குண்டுப்புரளி அச்சம் காரணமாக பொலிஸார் அனுமதி மறுக்கின்றனராம். 38

## நரசிம்மராவ் மறுக்கிறார்

மத்திய அமைச்சரவையில் சேர அ. தி. மு கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் அதைத் தாம் பரிசீலிப்பதாக ஜெயலலிதா குறிப்பிட்டமை குறித்து தமக்கு ஏதும் தெரியாது என்கிறார் பிரதமர் நரசிம்மராவ்.

# கல்முனை முஸ்லிம்கள் தமிழர்கள் மீது தாக்குதல்

மட்டக்களப்பு நற்பிட்டிமுனை, கல்முனை பகுதி முஸ்லிம் இளைஞர்கள் நாவீரன் பகுதியில் உள்ள தமிழர்களைத் தாக்கியுள்ளனர்.

கடந்த வாரம் நடைபெற்ற இச்சம்பவத்தின் போது முஸ்லிம் இளைஞர்கள் கத்திகளுடன் படையினர் உதவியோடு இக்கிராமத்தில் நுழைந்து பொதுமக்களைத் தாக்கினர். 50 வீடுகள் எரிக்கப்பட்டன.

இவர்கள் ஆறு தமிழர்களை பின்னர் கடத்திச் சென்றுள்ளனர்.

# மோசடி செய்யும் முகவர்களின் விவரங்களைப் பொலிஸ்சேகரிக்கிறது

தொழில் அமைச்சு விதித்துள்ள நிபந்தனைகளை மீறுகின்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் பற்றிய தகவல்களைத் தற்போது விசேட பொலிஸ் குழு ஒன்று சேகரித்து வருகின்றது.

இந்த விவரங்களைப் பொலிஸ் குழு இவ்வார இறுதியில் தொழில் அமைச்சுக்கு சமர்ப்பிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மோசடி செய்யும் வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (48)

# நூற்றுக் கணக்கானோர் இரத்ததானம் செய்தனர்

யாழ் பெரியாஸ்பத்திரி இரத்தவங்கிக்கு நேற்று நூற்றுக்கும் மேற்பட்டோர் இரத்ததானம் செய்தனர்.

குறிப்பாகப் பெண்களே அதிகமாக இரத்தம் வழங்கியதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

போர்க்கால சூழ்நிலையில் ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு அவசியம் இரத்தம் தேவைப்படுவதால் இரத்தம் வழங்க விரும்புவோர் இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரத்த தானம் செய்வதால் பல உயிர்களைக்காப்பாற்ற முடியும் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## நிகழ்ச்சி ஒத்திவைப்பு

யாழ் பல்கலைக்கழக விளையாட்டுக்கழகத்தினரால்இன்று வெள்ளிக் கிழமையும் நாளை சனிக்கிழமையும் நடைபெறவிருந்த ''தேனிசை மழை'' எனும் இசை நிகழ்ச்சி எதிர் வரும் 15 ஆம் திகதி திங்கட் கிழமைக்கு பின்போடப்பட்டுள்ளது.

## வீரமரணம்

நேற்றுமுன்தினம் ஆனையிறவு இராணுவத்தினர் தாக்குதல் தொடுத்தவாறு முன்னேற முயன்றபோது ஏற்பட்ட நேரடிமோதலில் இறுதிவரை தீரமுடன் போராடிய 2ஆம் லெப். சுதன் (செபமாலை யேசுதாஸ் மன்னார்), வீரவேங்கை லோ (சின்னத்தம்பி அமிர்தலிங்கம் ஒட்டுசுட்டான்) ஆகியோர் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர்.

நேற்று ஆனையிறவு இராணுவத்தினருடனான நேரடி மோதலில் இறுதிவரைபோராடிய ரமேஸ் (தம்பித்துரை முத்துக்குமார் இளவாலை) வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார். இவர்களுக்கு எமது வீரவணக்கத்தைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

## பல்கலைக்கழக கூட்டம்

யாழ் பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்கான விசேட பொதுக் கூட்டம் இன்று மு. ப 10. 00 மணிக்கு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

## ஹெலி சூடு

நேற்று அதிகாலையில் ஏழாலை, கட்டுவன். குரும்பசிட்டிப் பகுதிகளில் ஹெலிகப்டரில் இருந்து தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

நேற்று இரவு வல்வெட்டித்துறையைஅண்டிய பகுதிகளில் ஹெலியிலிருந்து சில மணிநேரம்சரமாரியாகத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றது.

அன்றைய தினம் அப்பகுதி கடற் பிராந்தியத்தில் கடற் படையினர் நடமாட்டம் அதிகரித்திருந்தது. (38, 39 33)

## ஆனையிறவு...

போடப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்

இதேவேளை கடந்த இரு நாள்களாக நடைபெற்ற மோதலில் இராணுவத்தினர் தரப்பில் மேஜர் தரத்திலான ஓர் அதிகாரியும் 14 சிப்பாய்கள் பலியானதாகவும்20படையினர் காயமடைந்ததாகவும் வோல்டர் பெர்னாண்டோ தெரிவித்தார்.

## இரு சடலங்கள் கரையொதுங்கின

நேற்று முன்தினம் கௌதாரிமுனைக்கடலில் படகு விபத்தில் மூழ்கி இறந்த இருவரது சடலங்களும் நேற்றுக் காலை தனங்கிளப்புக் கடற் கரையில் கரையொதுங்கின.

இவ்வாறு கரை ஒதுங்கிய இருசடலங்களில் ஒன்று அளவெட்டி கணேசன் என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டு எடுத்துச்செல்லப்பட்டது.

மற்றைய சடலத்தின் பெயர்,விவரம் தெரியாத நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ப 11 ப 5)

## பொதுக்கூட்டம்

யாழ் மாவட்ட கிராம சேவையாளர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (33)


### உதவி வைத்திய உத்தியோகத்தர்களை

## ஆறு மாத கால உள்ளகப் பயிற்சியில் ஈடுபடுத்தல்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மார்ச்சு - ஏப்பிரல் 90 இறுதிப் பரீட்சையில் சித்தியெய்திய பின்வரும் உதவி வைத்திய உத்தியோகத்தர்கள் 15. 07. 91 தொடக்கம் 6 மாத காலத்திற்கு எனது பிராந்தியத்தில் உள்ளகப் பயிற்சியில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள் இவர்கள் 15 07.91ற்கு முன்னராக எனது பணிமனைக்குச் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

பெயர்

1. செல்வி அலெக்ஸான்டர் காமெல் சுகன்யா
2 செல்வி தர்மலிங்கம் ஜீவன்ஜானா
3. செல்வி சிவராமலிங்கம் குமுதினி
4. செல்வி சோமலிங்கம் மங்கையர்மணி
5. செல்வி கோபாலபிள்ளை மாலினி
6. செல்வி சுவாம்பிள்ளை மரினா பிறேமினிதேவி
7. செல்வி துரைசிங்கம் பிறேமாதேவி
8. செல்வி கணபதிப்பிள்ளை பத்மநந்தினி
9. செல்வி நடராஜா ராஜலெட்சுமி
10. செல்வி ரட்ணம் சுமதி
11. செல்வி சிவபாலன் வள்ளிரமணி
12. செல்வி ஐயாத்துரை பூவதி
13. திரு சின்னத்துரை நவரத்தினராஜா.

டாக்டர் ந. கனகசபை
சுகாதார சேவைகள்
பிராந்தியப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

07056


## சாரணர்களுக்கு அறிவித்தல்

யாழ்மாவட்டத்தை சேர்ந்த சகல சாரணர்களும், திரிசாரணர்களும், சாரணத்தலைவர்களும், சாரணமுக்கியஸ்தர்களும் இன்று 12 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் உள்ள 'பாலம்' நிறுவனத்தில் கூடுமாறு வேண்டப்படுகின்றனர்.

## விபத்து மரணம்

புங்கங்குளம் சந்தியில் நேற்றுக்காலை இடம் பெற்ற வாகன விபத்தில் ஆனந்தரூபன் (13) என்ற சிறுவன் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது 79

## கலந்துரையாடல்

யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 4. 00 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற இருப்பதால் அனைத்து விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களையும் தவறாது சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.

## சமுகம் தரவும்

யாழ் இந்துக்கல்லூரி உயர்தரமாணவர்களை இன்று காலை 10 மணிக்கு கல்லூரிக்குச் சமுகமளிக்கும் படி கேட்கப்பட்டுள்ளனர்.

## தென்மராட்சிக்கு இரவு ஷெல் வீச்சு

நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு பலாலி இராணுவ முகாமிலிருந்து தென்மராட்சிப் பகுதியை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. 79 74

## லொறிகள் தரிப்பு

வடபகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதையடுத்து கொழும்பில் இருந்து வடபகுதி நோக்கி வந்த பல லொறிகள் வவுனியாவில் தரித்துநிற்கின்றன.

இதேபோல கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பயணிகள் பலர் வவுனியாவிலிருந்து மீண்டும் கொழும்புக்குத் திரும்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 33

## ஆனையிறவுராணுவ...

புலிகள் ஆனையிறவுமுகாமின் இரு முனைகளில் முன்னேறி முகாமில் இருந்து சிறிது தூரத்தில் நிலைகொண்டதாகத்தெரிவிக்கப்படுகிறது.

## குண்டுவீச்சு...

களில் ஹெலிகள்கலிபர்த்தாக்குதலை நேற்று மாலை நடாத்தின. சேதவிவரம் தெரியவில்லை.

## ஆஸ்பத்திரி...

நேற்று யாழ்ப்பாண பிரதிநிதிகள் இராணுவ உயர் மட்டத்துடன் உரையாடியதைத் தொடர்ந்து நேற்று அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக அப்பிரதிநிதிகள் தெரிவித்தனர். 79

## முகாம்...

கள் விமானங்களும், ஹெலிக்கப்டர்களும் 40 மணி நேரமாக தாக்குதல் நடாத்திய வண்ணமுள்ளன.

விடுதலைப்புலிகளின் தாக்குதல் தொடர்ந்த வண்ணமுள்ளது. 79

## வீதியை...

விட்டு வெளியேறி நடமாடுவதையும் தவிர்க்குமாறும் விடுதலைப்புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (79)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டசுவீதி 'லக்ஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 12.07.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றதுபல்.